2010 ஏப்ரல் 19]

2. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

51—

நெற்களம்

***57431—திரு. எஸ். ஜெயபால்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, மேலப்புத்தேரியில் நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மேலப்புத்தேரியில் நெற்களம் அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.*

திரு. எஸ். ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மேலப்புத்தேரி என்ற கிராமம் முற்றிலும் நெல் வயல்களால் சூழப்பட்ட ஒரு கிராமம். அந்தக் கிராமத்தைச் சுற்றி சுமார் 1,000 ஏக்கர் பரப்பளவில் நெல் விவசாயம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முழுவதும் விவசாயிகள் நிறைந்த அந்தக் கிராமத்தில் அறுவடைக் காலங்களில், நெல் அறுவடை செய்து, கதிர் அடிப்பதற்கு ஏற்றவகையிலே அங்கே நெற்களங்கள் எதுவும் கிடையாது. அங்கே இருக்கக்கூடிய விவசாயிகளெல்லாம் நெற்கதிர்களை சாலையோரங்களிலும், தெரு ஓரங்களிலும் வைத்து*

அடிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. மழைக் காலத்திலும் அறுவடை நேரங்களிலும் ஏராளமான நெல்லும், கால்நடைகளுக்குப் பயன்படக்கூடிய வைக்கோல்களும் வீணாய்ப் போகின்றன. எனவே இதைக் கருதி மேலப்புத்தேரி பகுதியிலே மட்டுமல்ல; என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நெல் விவசாயம் அதிகமாக நடைபெறுகின்ற மேலச்சங்கரன்குடி, மணவாளக்குறிச்சி, பெரியகுளம் ஏலா, வெள்ளிமலை பேரூராட்சிக்குட்பட்ட கல்படி ஏலா போன்ற பகுதிகளிலேயும் நெற்களங்கள் அமைத்துக் கொடுத்தால், விவசாயிகளுக்கு மிகவும் பயன்படத்தக்கதாக இருக்கும். எனவே, அந்தப் பகுதிகளிலே நெற்களங்கள் அமைத்துக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாகத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் சட்டமன்றத் தொகுதி, மணவாளக்குறிச்சியில் ஏற்கெனவே 1998-99-இலேயே ஒரு களம் அமைக்கப்பட்டிருக்கிறது. கடியப்பட்டினம், ஆத்தங்கரை காலனி ஆகிய பகுதிகளிலே ஒரு நெற்களம் அமைக்கப்பட்டிருக்கிறது. தனியன்வடக்கு, பேயன்குழி பகுதியிலே ஓர் உலர்களம் அமைக்கப்பட்டிருக்கிறது. கடியப்பட்டினம், உன்னன்குளம் பகுதியிலே 2002-2003-லே ஒரு நெற்களம் அமைக்கப்பட்டிருக்கிறது. அவர் கேட்ட இந்தக் கேள்விக்கு குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேலப்புத்தேரியில் நெற்களம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை என்று நான் சொன்னாலும் அந்தத் தொகுதியிலே 4 உலர்களங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும். கன்னியாகுமரியில் இதுபோன்ற உலர்களங்கள் அமைப்பதற்கு நிலம் கிடைப்பது கஷ்டம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குரிய நிலம் குறித்து என்னிடத்திலே எழுதித் தருவார்களானால் உலர்களம் அமைப்பது பற்றி இந்தத் துறை பரிசீலிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.*

2010 ஏப்ரல் 19]

திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெற்களங்கள் அமைப்பதற்குரிய இட வசதி பல கிராமங்களிலே இருக்கிறது. சம்பந்தப்பட்ட துறையைச் சார்ந்த அதிகாரிகள் என்னை அணுகினால் நிச்சயமாக அந்த இடங்களைத் தேர்வு செய்து கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கின்றேன். மேலும், அமைச்சர் கூறியபடி சில இடங்களிலே நெற்களங்கள் அமைக்கப்பட்டிருப்பது உண்மை. எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அது முற்றிலும் விவசாயம் சார்ந்த ஒரு மாவட்டம். தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாகத் தஞ்சை மாவட்டம் திகழ்வதைப்போன்று, ஒரு காலத்தில் 1956-க்கு முன்னால் கேரள மாநிலத்தினுடைய நெற்களஞ்சியமாகக் குமரி மாவட்டம் இருந்தது. இந்தக் குமரி மாவட்டத்தில், நாஞ்சில் நாடு என்று அழைக்கப்படக்கூடிய, நெல் விவசாயம் சிறப்பாக நடைபெறக்கூடிய, அந்தப் பகுதிகள் எல்லாம் இன்றைக்கு வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டு, விளைச்சல் தரக்கூடிய அந்த நிலங்கள் எல்லாம் இன்று வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டு விவசாயமே அழிந்து போகக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், சில மாதங்களுக்கு முன்னால் எங்கள் மாவட்டத்தில் நிகழ்ந்த ஒரு விழாவிலே கலந்து கொண்டபோது, நானும், எங்கள் மாவட்ட ஆட்சியர் திரு. ராஜேந்திர ரத்னு, I.A.S., அவர்களும், கேரள மாநிலத்திலே விவசாய விளை நிலங்களை வீட்டுமனைகளாக மாற்றுவதற்குத் தடைச் சட்டம் இருப்பதைப் போன்று தமிழகத்திலே அந்தத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தால், விளைநிலங்களை நாம் பாதுகாக்க முடியும்; அதைத் தொடர்ந்து நிலத்தடி நீரையும் பாதுகாக்க முடியும்; குமரி மாவட்டத்திலே விளைநிலங்கள் எல்லாம் வீட்டுமனைகளாக மாறக்கூடிய ஒரு சூழ்நிலை தொடரும் என்று சொன்னால், அங்கே நிலத்தடி நீரும் பாதிக்கப்படும்; அதன்மூலமாக மிகப் பெரிய குடிநீர்ப் பஞ்சமும் ஏற்படும்; எனவே, இதைத் தவிர்க்கின்ற வகையில் கேரள மாநிலத்தைப் போன்று, தமிழகமும் விளைநிலங்களை வீட்டுமனைகளாக மாற்றுவதற்கு ஒரு தடைச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தினோம். அமைச்சர் அவர்களும் அதை உள்வாங்கி, நிச்சயமாக மாண்புமிகு முதல்வரோடு கலந்து, கேரள மாநிலத்தைப் போன்று தமிழகத்திலும் அந்தத் தடைச் சட்டம் கொண்டு வரப்படும் என்று சொன்னார்கள். அந்தத் தடைச் சட்டம் உடனடியாக அமல்படுத்தப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.

[2010 ஏப்ரல் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-40

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் சட்டமன்றப் தொகுதியிலே நான்கு உலர்களங்கள் அமைக்கப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் ஒத்துக்கொள்கிறார். ஆனால், அவர் கேட்டிருக்கின்ற அந்தக் கிராமப் பகுதியில், நிறைய நிலம் இருப்பதாகச் சொல்லுகின்றார். கிராமத்திலே நிலம் இருந்தாலும், இதுபோன்ற உலர்களம் அமைப்பதற்கு அந்த ஊரிலே இருப்பவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். அல்லது, விவசாய நிலத்திலே பொது உலர்களம் அமைப்பதற்கு அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகள் எல்லோரும் சேர்ந்து இடம் கொடுப்பார்களேயானால் அங்கு உலர்களம் அமைக்கப்படும் என்றுதான் நான் இப்பொழுதும் பேசிக்கொண்டிருக்கின்றேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், மொத்தமாக 16 உலர்களங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டப் பகுதிகள் எல்லாம் நெல் விளைநிலங்களாக இருக்கின்றன என்று சொன்னார். அண்டை மாநிலத்தில் இருப்பவர்கள் அவற்றை வாங்கி, மூன்று ஆண்டுக் காலம் பயிர் செய்யாமல், அப்படியே போட்டுவிட்டு, மூன்று ஆண்டுகளாகப் பயிர் செய்யாததால், அவற்றை வீட்டுமனைகளாக நாங்கள் பிரிக்கிறோம்; அதற்கு 'No Objection' சான்றிதழ் வழங்கவேண்டும் என்று முறைப்படி விண்ணப்பம் செய்து, அதைப் பெற்று வீட்டுமனைகளாக விற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. நான் அந்தக் கூட்டத்திலேயே சொன்னேன். கேரள மாநிலத்திலே, நன்செய் நிலங்களை, விளைநிலங்களைக்' கையகப்படுத்தக்கூடாது என்று ஒரு தடைச் சட்டம் இருக்குமானால், அதைப் பரிசீலித்து முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, இங்கேயும் அதுபோன்ற ஒரு தடைச் சட்டம் போட முடியுமானால் போடுவோம் என்றுதான் சொன்னேன்; இப்பொழுதும் மறுக்கவில்லை. உடனடியாக நான் சென்னைக்கு வந்ததும் நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலே அதைப்பற்றி எடுத்துச் சொன்னதும், அக்கறையோடு அதைக் கேட்டு, அப்படிப்பட்ட சட்டம் அங்கு இருந்தால், நாமும் அதைப் பின்பற்றிப் பரிசீலிக்கலாம் என்று முதலமைச்சர் சொன்னதற்கு ஏற்ப, மாவட்ட

2010 ஏப்ரல் 19]

ஆட்சித் தலைவரிடத்திலே நான் நேரடியாகத் தொடர்புகொண்டு, உடனடியாகக் கேரள மாநிலத்திலே இருக்கக்கூடிய அந்தச் சட்ட விதிமுறைகளைப் பெற்று, உங்களுடைய கருத்தையும் பரிந்துரை செய்து அனுப்புங்கள் என்று சொன்னேன். ஐந்து நாட்களுக்குள் அவரும் அனுப்பிவிட்டார். அது இப்பொழுது அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

52—

நீதிமன்ற வளாகம்

***59279—திரு. வே. மாரிமுத்து:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நாகப்பட்டினத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பதற்கான செயற்குறிப்பு, சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும் பட்சத்தில், நிலம் கையிருப்பு மற்றும் அரசின் நிதிநிலைமைக்கேற்ப அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து.

திரு. வே. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நாகையிலே இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய நீதிமன்ற வளாகத்தில் மாவட்ட நீதிமன்றம், தலைமை நீதித் துறை